# யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்!

## திங்கட்கிழமை அணிதிரளுமாறு அழைப்பு

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

“எங்களால் மேற்கொள்ளப்படவுள்ள ஜனநாயக அடிப்படையிலான போராட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கவனத்தை ஈர்ப்பதுடன் எங்களின் பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு அரசை வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

2▶





# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 12 வியாழக்கிழமை 25.04.2024 கதிர் 240







## நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டேன் என சிலர் பொய் பிரச்சாரம் செய்து வருகின்றனர்!

### சதித் திட்டம் தீட்டுகின்றனர் போலும் என்கிறார் சஜித்

டீல் போடும் அரசியலுக்கு அடிபணியாமல் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயமாக போட்டியிடுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (24) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் மூன்று நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எந்தவொரு சக்திக்கும் சரணடையாமல் செயற்பட்டு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மையை வெளிக்கொணர வருங்கால ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் செயற்படுவேன்



எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் உரையாற்றுகையில்

2▶

## வழக்கு விசாரணை முடியும் வரையில் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு மைத்திரிபாலவிற்கு தடை உத்தரவு!

தொடரப்பட்டுள்ள வழக்கு முடிவடையும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வகிப்பதற்கு இடைக்காலத் தடை விதித்து கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன் விதான நேற்று (24) உத்தரவு பிறப்பித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கைக் செயற்குழு உறுப்பினரும் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான மொண்டேகு சரத் சந்திரவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றை பரிசீலித்த பிரதம மாவட்ட நீதிபதி, வழக்கின் விசாரணை மற்றும் இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை இந்த இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி பதவி நீக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு மைத்திரிபால சிறிசேனவுக்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என மொண்டகு சரத்சந்திர இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, அவரை கட்சியின் தலைவராக செயல்பட விடாமல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும்

2▶

## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிரான யாழ். நீதிமன்ற வழக்கு ஜூன் 20 இற்கு ஒத்திவைப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பான வழக்கு இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசன் இன்றும் நீதிமன்றத்தில் ஆஜராகததால், திருகோணமலையில் அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அழைப்புக் கட்டளை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்போது முதலாம் மற்றும்

2▶

## சஜித் – அனுர விவாதத்திற்கு ஏற்பாடு செய்து தரத் தயார்!

### சட்ட மாணவர் சங்கம் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான உத்தேச விவாதத்தை

2▶

## இலங்கையில் மீண்டும் மலேரியா நோய் பரவும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை

### விமான நிலையச் சோதனைகள் திருப்தியில்லை என்கிறார் மருத்துவர் சம்பா அலுத்வீர

மலேரியா நோய் பரவியுள்ள நாடுகளுக்கு சென்று மீண்டும் இலங்கை திரும்புகின்ற பயணிகளின் இரத்தப் படலங்களைச் சரிபார்ப்பதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியடையவில்லை எனவும், ஆகையினால் அரசு மருத்துவமனை அல்லது மலேரியா எதிர்ப்பு பிரச்சார பிரிவிற்கு வந்து இரத்தப் படலங்களைப் பரிசோதிக்குமாறு மலேரியா எதிர்ப்பு இயக்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் சம்பா அலுத்வீர கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒரு துளி இரத்தத்தை சோதனை பட்டியொன்றின் மூலம் மாத்திரம் பரிசோதிக்கும்போது மலேரியா ஒட்டுண்ணியை சரியாக அடையாளம் காண முடியாது மற்றும் பிழையான மருத்துவ அறிக்கைகள் பெறப்படலாம், எனவே உடலில் உள்ள நோய்க்கிருமி ஒட்டுண்ணியா என்பதை சரியாகக் கண்டறிய நுண்ணோக்கி மூலமே இரத்தப் பரிசோதனையை சரியாக மேற்கொள்ளலாம்

2▶

## புலிகளுக்கு எதிராக ஒன்றாக போரிட்ட நம் ராணுவத்தினர் இன்று ரஷ்யா, உக்ரெய்னில் தமக்குள் போரிடுகின்றனர்!

### தயாசிறி ஜயசேகர எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

அன்று எல்ரீரீக்கு எதிராகப் போரிட்ட இலங்கை இராணுவம் இன்று ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்த இரு நாடுகளுக்காக எதிர் எதிராக போரிட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று (24) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் “நமது ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் ரஷ்யாவில் முகாம் உதவியாளர்களாக கொண்டு செல்லப்படுகின்றனர். இதில் பெரும் மோசடி நடக்கின்றது. எங்கள் ராணுவத்தினரை முகாம் உதவியாளர்களாக அழைத்துச் சென்று பின்னர் ரஷ்ய-உக்ரேனிய போரில் தள்ளுகின்றனர். இவ்வாறே குசாந்த குணதிலக்க என்ற ராணுவ வீரரை அழைத்துச் சென்று போர் டாங்கியில்



அமர்த்தியுள்ளனர். அந்த போர் டாங்கி வெடித்து சிதறியதில் 2 பேர் பலியாகினர். அதிலிருந்து குசந்த தப்பித்தாலும், அவர் எங்கு உள்ளார் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. அவர் நமது ராணுவத்தில்

2▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## யாழ் மாவட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் மிக நீண்ட காலமாகப் பட்டதாரிகளுக்கான வேலையில்லாப் பிரச்சினை நிலவி வரும் சூழலில் அவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்லுகின்றமை வேதனைக்குரிய விடயமாகும். இலங்கையின் கல்வித் திட்டத்தின் கீழ் 20 வருடங்கள் கல்வி கற்று பட்டதாரிகளாக வெளியேறுவோர் பின்னர் சாதாரண கூலித் தொழிலுக்கே சென்று வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வேண்டிய மனச்சங்கடமான நிலையையே எதிர்கொள்கின்றனர். ஏராளமான இளைஞர்கள் தமது எதிர்காலக் கனவுக்காகப் படித்து பட்டதாரிகளாகி இன்று எவ்விதத்திலும் பயனற்றவர்களாக வேலையில்லாப் பட்டதாரிகள் என்ற பெயரோடு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான எமது அவல நிலைமை எதிர்கால மாணவர்களுக்கும் கல்வி மீதான விரக்தியையும் பட்டப்படிப்பு மீதான அவநம்பிக்கையையும் உருவாக்கியுள்ளது. இதன் தாக்கம் இலங்கையின் கல்வி அறிவு மற்றும் வளர்ச்சியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இவற்றை அறிந்தும் அறியாமலும் உள்ள அரசின் அசமந்தபோக்கானது நாட்டின் முதுகெலும்பாக இருக்க வேண்டிய கல்வி கற்ற இளைஞர்களைப் பயந்தவர்களாக வாழ வைத்துள்ளது.

இதன் விரக்தியாலும் மன அழுத்தத்தாலும் நாடு தழுவிய ரீதியில் பட்டதாரிகள் அனைவரும் ஜனநாயக அடிப்படையில் அமைதியான போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் வடக்கு மாகாணப் பட்டதாரிகளாகிய நாமும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பை மேற்கொள்ளவுள்ளோம்.

1. பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் போட்டிப் பரீட்சைகள் நிராகரிப்பு செய்யப்பட வேண்டும்

2. ஏற்கனவே அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மீண்டும் ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையில் கொண்டு வருதல் நியாயமற்றது. அது வேலையற்ற பட்டதாரிகளைப் பாதிக்கின்றது.

3. வடக்கு மாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய பட்டதாரிகளின் வாழ்வியல் தொடர்பான அரசின் கரிசனை என்ன?

4. வேலையற்ற பட்டதாரிகளும் சமூகத்தில் எதிர்கொள்ளும் அவமானங்களும் சவால்களும் அதன் ஊடாக ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் பட்டதாரிகளின் எதிர்காலம் குறித்து அரசின் நிலைப்பாடுகள் என்ன ?

இது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தாது ஜனநாயக முறையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தில் தொடர்ந்து நமது கோரிக்கைகள் உள்ளடக்கிய மகஜரை ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதுடன் வடக்கு மாகணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்குமான மகஜர் கையளிப்பு இடம்பெறவிருப்பதால் வடக்கு மாகாண பட்டதாரிகள் உங்கள் நேரங்களை ஒதுக்கி இம் மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் காலை 9 மணியளவில் "நமக்காய் நாமே" என்னும் தொனிப்பொருளில் போராட்டம் நடைபெறவுள்ள நிலையில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் அதில் கலந்துகொள்ளுங்கள்" - என்றனர்.

இது தொடர்பான சந்தேகங்கள் மற்றும் தெளிவுபடுத்தலுக்கு 0773539992 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நான் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நான் ஜனாதிபதி தேர்தலுக்கு வரமாட்டேன் என சிலர் கூறுகின்றனர். நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் என்று உறுதியாக கூறுகின்றேன். நான் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என கூறுகின்றவர்கள் எனக்கெதிராக ஏதேனும் சதித் திட்டம் தீட்டியுள்ளனரோ தெரியவில்லை. நினைவில் கொள்ளுங்கள், நான் மரணத்திற்கு பயப்படுபவனல்ல. காலிமுகத்திடல் போராட்டத்தின் போது கூட என்னை கொலை செய்ய முயன்றனர். அவர்களுக்கு நாங்கள் பயப்படவில்லை. நாங்கள் கோழைகள் அல்ல, என் தந்தையும் மரணத்திற்கு அஞ்சியவரல்ல. அதனால் என்னுடன் அனாவசியமான கொடுக்கல் வாங்கல் செய்ய எவரும் முன்வராதீர்கள், அத்தகைய எண்ணத்துடன் டீல் போட வராதீர்கள். எனக்கு எனது மக்களுடன் தான் டீல் உள்ளது என கூற விரும்புகின்றேன்" என றார். (ரெசி-112)

## வழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என மனுதாரர் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளபடி, ஜனாதிபதி பதவியிலிருந்து நீங்கிய பின்னரும் கட்சியின் தலைவராக முதல் பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் செயற்படுவது சிக்கலுக்குரிய விடயம்தான் என சுட்டிக் காட்டிய நீதியரசர் இது தொடர்பில் இரு தரப்பினரும் எழுத்துப்பூர்வமாக பதில் அளிக்குமாரும் உத்தரவிட்டார்.

கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ஒருவர் மேற்படி பதவிக் காலத்தை பூர்த்தி செய்த பின்னர் அவரே கட்சியின் அதிகாரபூர்வ போசகர் ஆவார். பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேனவும் மேற்படி அரசியலமைப்பின் பிரகாரம் போசகர் பதவியை வகிப்பார் என கட்சி உறுப்பினர்கள் நம்பிக் கொண்டிருந்தனர், இருப்பினும் மைத்திரிபால சிறிசேன 18.11.2019 ஆம் திகதிக்கு பின்னரும் அவற்றை கவனத்திற் கொள்ளாமல் தலைவர் பதவியை தொடர்ந்து வகிப்பது சட்ட விரோதமானது என மொண்டேகு சரத்சந்திர தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். அந்த வழக்கில் மைத்திரிபால சிறிசேனவுக்கு மேலதிகமாக அப்போது கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர். மனுதாரர் சார்பில் சட்டத்தரணி தினேஷ் டி சில்வா, சாமர நாணயக்காரவசம், ஹிரண்ய துமுனுபொல, சட்டத்தரணி சாமோதி ராஜநெத்தி, சட்டத்தரணி சாந்த ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (ரெசி-114)

## சஜித்-அனுர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டக் கல்லூரி வளாகத்தில் நடத்த விரும்பினால், ஒரு பக்கச்சார்பற்ற நிறுவனம் என்ற ரீதியில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தர தாம் தயார் என இலங்கை சட்ட மாணவர் சங்கத்தின் தலைவர் நவோத் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் ஆரோக்கியமான விவாதங்களை முன்னெடுப்பதன் மூலம் சட்டம் ஒழுங்கு, பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கல்வி போன்ற முக்கியமான தலைப்புகளில் விவாதங்களை பரவலாக்குவது தமது முக்கிய நோக்கமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-115)

## தமிழரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்றாம் எதிராளிகள் தரப்பு சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தங்கள் தரப்பு கருத்துக்களை முன்வைக்கக் கால அவகாசம் கோரினார்.

இதையடுத்து எதிராளிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைக்கக் கால அவகாசம் வழங்கி எதிர்வரும் ஜீன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றதைத் தொடர்ந்து வழக்கு எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மலேரியா ஒட்டுண்ணி இல்லாவிட்டாலும் வெளிநாட்டிலிருந்து வருபவர்களின் உடலில் மலேரியா ஒட்டுண்ணி இருந்தால் அவற்றை பரப்பக்கூடிய அனாஃபெலிஸ் வகை கொசுக்கள் இங்கு இருப்பதால் அந்த கொசுக்கள் அவற்றை காவிச் செல்வதன் மூலம் மீண்டும் நோய் பரவக்கூடிய அபாயம் உள்ளது எனவும் மருத்துவர் சம்பா எச்சரித்துள்ளார்.

இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 9 மலேரியா நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், அவர்கள் அனைவரும் மலேரியா பரவியுள்ள நாடுகளுக்குச் சென்று இலங்கை திரும்பியவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-116)

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திறமையான ஒரு வீரராக இருந்தவராவார். இந்தியாவிலுள்ள சட்டத்தரணி ஒருவரது நிறுவனத்தினூடாகவே அங்கு அவர் சென்றுள்ளார். இவ்வாறு ஏராளமானோர் அங்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதற்காக ஒவ்வொருவரிடமும் தலா 18 லட்சம் ரூபாய் அறவிடப்பட்டுள்ளது.

நமது ராணுவத்தில் இருந்தவர்கள் ரஷ்யா, உக்ரைன் என தரப்பிலிருந்து ஒருவருக்கு எதிராக ஒருவர் போர் புரிகின்றனர். அங்கு இலங்கை இராணுவம் இரு புறமும் பிரிந்துள்ளது. நமது ஓய்வு பெற்ற ராணுவ வீரர்களுக்கு சரியான வருமானம் இல்லாததாலேயே இவ்வாறு நடக்கின்றது. இது தொடர்பாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது என கேட்க விரும்புகின்றேன். ஏனெனில், இன்று இலங்கை இராணுவத்தினர் இரு தரப்பிலும் சண்டையிடுகிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாங்கள் ஒன்றாகப் போராடினோம். இன்று இலங்கை இராணுவம் வேறு இரு நாடுகளுக்கிடையே ஒருவரை ஒருவர் எதிர்த்து போரிடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது" என றார். (ரெசி-113)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# புத்தளத்தில் இரத்ததான முகாம்



(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

தர்மசக்தி அமைப்பு, கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்களின் சம்மேளனம் மற்றும் புத்தளம் நகர சபை ஆகியன இணைந்து புத்தளம் ஆதார வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் இரத்த தான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த இரத்த தான முகாம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் ஆதார வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் வைத்தியசாலையின் வேண்டுகோளை ஏற்று இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

இந்த இரத்த தான முகாமில் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கிய அனைவருக்கும்

தர்மசக்தி அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முஹம்மது ருமைஸ் நன்றிகளைத் தெரிவித்தார்.

# இலங்கை பல் மருத்துவ சங்கத்துடன் இணைந்து மாணவர்களுக்கு பல் சுகாதார விழிப்புணர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பல்மருத்துவ சங்கத்துடன் இணைந்து, சிக்னல் ஸ்ரீலங்கா காலியில் உள்ள சமனல மைதானத்தில் 2,000 பாடசாலை மாணவர்களுக்கும் 200 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இலவச பல் பரிசோதனைகளை நடத்தியதோடு, வாய்வழி சுகாதாரக் கல்வியையும் அண்மையில் வழங்கியது.

இந்த முயற்சியானது சிக்னல் டெலி பல் மருத்துவத் திட்டத்தின் தொடக்கத்துடன் இணைந்ததாகும். இது இலங்கையில் முதன் முறையாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் இலங்கை முழுவதும் பல் மருத்துவ ஆலோசனைகளை அந்தத் திட்டம் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல் மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம், பல் மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான ஒரு மதிப்புமிக்க தளமாக இருந்ததாக பங்குகொண்டோர் தெரிவித்தனர்.

# கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற மகிழ்ச்சி விழா

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ரமழான் நோன்புப் பெருநாள் மற்றும் தமிழ், சிங்களப் புத்தாண்டு என்பவற்றை முன்னிட்டு கல்முனை மாநகர சபையில் ஏற்பாடு செய்யப்பட்ட மகிழ்ச்சி விழா நேற்று புதன்கிழமை (24) மாநகர கேட்போர் கூடத்தில், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் நடைபெற்றது.



பல்லின சமய ஆராதனைகளுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், . பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோர் உரையாற்றியதுடன், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தரான என்.பரமேஸ்வரவர்மன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதன்போது பொறியியல் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். டிலிப் நௌஷாத் உள்ளிட்டோரின் பாடல் மற்றும் கலாசார, விநோத நிகழ்ச்சிகள் சபையோரின் வரவேற்பைப் பெற்றிருந்தன.

மகிழ்ச்சி விழாவின் ஓர் அங்கமாக பகல் போசன விருந்துபசாரமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உள்ளூராட்சி உதவியாளர் சி. சர்ஜ/ன் தாரிக் அலி, வேலைகள் அத்தியட்சகர் எம்.ரி.எம். நஹீம், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.பாஸித், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ் தலைமையிலான குழு இவ் விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.




# முந்திரி மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன



(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர் அகில இலங்கை வாலிபர் முன்னணி (லுஆஆயு) கிளையின் ஏற்பாட்டில் ஊவைல புயசனநெ இன் திருகோணமலை மாவட்டத்தின் இணைப்பாளர் அஷ்ஷேக் சித்தீக்கின் தலைமையில், அறபா நகரில் தேவையுடைய நபர்களுக்கு முந்திரி க்கன்றுகள் இன்று வழங்கப்பட்டன.

இதில் மூதூர் லுஆஆயு கிளையின் தலைவர் ஜிஹாத் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கலந்து கொண்டதோடு பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# பிரிக்ஸ் கூட்டணியில் இலங்கை இணைவதற்கு சீன அரசு உதவவேண்டும் - மனோ கணேசன்

பிரிக்ஸ் கூட்டணியில் இலங்கையை இணைப்பதற்கு சீன அரசு உதவவேண்டுமென சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அமைச்சரான சன்ஹையானிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்மனோ கணேசன்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணிக்கும் இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழு உறுப்பினரும், துணை அமைச்சருமான சன் ஹையானுக்கும் இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே மனோ கணேசன் குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மனோ கணேசன், இன்று உலகப் பொருளாதாரம் ஆசியாவை மையமாக கொண்டுள்ளது. இங்கே சீனா தலைமை பாத்திரம் வகிக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, சீனா, இந்தியா, ரஷ்யா, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளின் 'பிரிக்ஸ்' என்ற கூட்டமைப்பு உருவாகியுள்ளது.

இந்த பிரபல பிரிக்ஸ் கூட்டமைப்பில் இலங்கையும் எதிர்காலத்தில் இடம்பெற சீனா உதவிட வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக பிரதித் தலைவர் திகாம்பரம் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(04)





# இலங்கை ஏ அணியில் மொஹமட் சிராஸ்!

ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிராக இலங்கையில் நடைபெறவுள்ள உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடரின் முதல் இரண்டு போட்டிகளுக்கான இலங்கை ஏ குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழாத்தில் தமிழ்பேசும் வீரர் மொஹமட் சிராஸ் இடம்பெற்றுள்ளார். வேகப்பந்துவீச்சாளரான இவர் கடந்த சில மாதங்களாக உள்ளூர்ப் போட்டிகளில் சிறந்த ஆட்டத்திறனை வெளிப்படுத்தியதன் காரணமாக அணியில் இடம்பெற்றுள்ளார்.

,லங்கை ஏ அணியின் தலைவராக இலங்கை தேசிய அணியில் விளையாடி வரும் சஹான் ஆராச்சிகே நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் மினோத் பானுக, நிசான் மதுஷ்க, நுவனிது பெர்னாண்டோ, துஷான் ஹேமந்த, லஹிரு உதார, சாமிக்க குணசேகர மற்றும் சமிக்க கருணாரத்ன ஆகிய தேசிய அணியின் வீரர்களும் குழாத்தில் இடம்பிடித்துள்ளனர்.

இவர்களுடன் பவன் ரத்நாயக்க, அஹான் விக்ரமசிங்க, வனுஜ சஹான் மற்றும் நிமேஷ் விமுக்தி போன்ற உள்ளூர்ப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்திய வீரர்களும் முதலிரண்டு போட்டிகளுக்கான குழாத்தில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை வரும் ஆப்கானிஸ்தான் ஏ அணி 5 உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் மற்றும் ஒரு நான்கு நாள் போட்டி ஆகியவற்றில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டித் தொடர் எதிர்வரும் 28ம் திகதி ஹம்பாந்தோட்டையில் ஆரம்பமாகவுள்ளது.

# பால் மா விலை குறைப்பு எழுந்துள்ள சர்ச்சை!



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையை மீண்டும் குறைப்பதற்குத் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என தகவல்கள் வெளியாகி உள்ளன.

குறித்த தகவலை பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் பால் மாவின் விலைத் திருத்தம் தொடர்பில் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை என்றும் அசோக பண்டார குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மாதம் பால் மா இறக்குமதியாளர்கள் 400 கிராம் பால்மாவை 60 ஷரூபாவாலும், ஒரு கிலோகிராம் பால்மாவை 150 ஷரூபாவாலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்படி, தற்போது பால் மா சந்தையில் பல்வேறு விலைகளுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் பால் மாவின் விலையை குறைப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அசோக பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மீண்டும் பால் மாவின் விலையைக் குறைப்பதாக நியூசிலாந்தில் இருந்து பால் மாவை இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்று நேற்று அறிவித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தமை கவனிக்கத்தக்கது. (04)

# யாழ்ப்பாணம் போதனாவில் மூளைக்காய்ச்சலால் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சலுக்காகச் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். மன்னார், பள்ளிமுனை பகுதியைச் சேர்ந்த ஜோன் திரவியம் குமரசேன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி காய்ச்சல் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மறுநாள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (24) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மூளைக் காய்ச்சல் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டடது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பால் தேநீரின் விலையை குறைக்குமாறு கோரிக்கை!

பால் தேநீர் ஒன்றினை 80 ஷரூபாவிற்கு விற்பனை செய்யுமாறு தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலைகள் குறைக்கப்படவுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சிக்கு அமைய இவ்வாறு விலை குறைப்பு அறிவிக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளிவந்திருந்தன.

அண்மைக் காலமாக பால் மாவின் விலை அதிகரிப்பு காரணமாக தேநீர் விலை உயர்த்தப்பட்டதனால் மக்கள் பால் தேநீர் அருந்துவதனைத் தவிர்த்து வந்தனர் என தகவல்கள் வெளியாகியிருந்தன என்றும், தற்பொழுது பால்மா விலை குறைக்கப்பட உள்ளதாகவும் இதனால் பால் தேநீரின் விலை குறைக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)



# மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரைப் பிரதேசமும்! மன்னாரில் ஊடகவியலாளரின் நூல் வெளியீட்டு விழா

மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் "மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரைப் பிரதேசமும்" என்ற இடப்பெயராய்வு நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை (23) காலை மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

இந்த நூலில், மகாவம்ச விஜயனும் அவனது எழுநூறு தோழர்களும் வந்திறங்கிய இடமாக மன்னார் கட்டுக்கரைக் குளம், சங்ககால இலக்கிய நூல்களை மேற்கோள் காட்டி மகாவம்ச நூல்கள் கூறும் இடபெயர்வுகள், மற்றும் தற்போது மன்னார் மாவட்டத்தில் காணப்படும் இடப்பெயர்வுகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் றோட்டரிக் கழகத்தின் அனுசரணையுடன், அதன் தலைவர் றொபேட் பீரிஸின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நூல்வெளியீட்டு விழாவில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# சம்மாந்துறை பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் தாஸீம் ஓய்வு

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தராக கடந்த 2013 ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கடமை புரிந்து வந்த எம். எல் தாஸீம் தனது 34 வருடகால அரசசேவையில் இருந்து இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.



இவருக்கான பிரியா விடை நிகழ்வு நேற்று (24) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிராம சேவை உத்தி யோகத்தர்தரம்1ஐச்சேர்ந்த இவர், 1990 ம்ஆண்டு நில அளவைதிணைக்களத்தில் பட வரைவாளராக சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகராக கடமையாற்றினார். அதன் பின்னர் 1999ம் ஆண்டு 10 ம் மாதம் 4ம் திகதி கிராம சேவகர் பரீட்சையில் சித்தியடைந்து கிராம சேவகராக சம்மாந்துறை பிரதேச செயலகத்தல் கடமையாற்றியதோடு 2013 ம் ஆண்டு பதில் நிர்வாக கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி இன்றுடன் (25) ஓய்வு பெறுகின்றார்.

தற்போது சம்மாந்துறை மஸ்ஜித் நகர் பள்ளிவாசல் தலைவராகவும், சம்மாந்துறை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளராகவும் செயற்படுகின்றார்.

சம்மாந்துறை பிரதேச செயலக கிராம சேவகர் நலனோம்பல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ எல் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்./ஹசைன், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே றினோஸா, பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரி எப்.சாஹினா (காணி), எம்.சவாஹீர் உட்பட கிராம சேவகர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க "ஈத் விருந்தோம்பல்" நிகழ்வு நேற்று



(நூருல் ஹூதா உமர் )

நோன்பு பெருநாளை சிறப்பிக்கும் வகையில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "ஈத் விருந்தோம்பல்" நிகழ்வு நேற்று (24) புதன்கிழமை சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக்கின் பங்குபற்றலுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எம்.ஆசிக் நெறிப்படுத்தலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், ஏ.எம். மசூதா, எம்.ஐ.ஷர்பீன், எம்.ஏ.எம்.சப்றாஸ், எம்.இர்ஷாத், ஏ.ரஹீம் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு இதயபூர்வமான நன்றிகளை கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா இதன்போது தெரிவித்தார்.



# பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஜோஸப்வாஸ்நகர் ஐக்கிய வி.க. சம்பியன்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னாரில் இடம்பெற்ற பெண்களுக்கான பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் வ.நியூளினி தலைமையிலான ஜோஸப்வாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மீண்டும் சம்பியனாகியுள்ளது.



# ஒலுவில் துறைமுக அபிவிருத்திக் கலந்துரையாடல் மே முதலாம் திகதி இந்திய உயர் ஸ்தானிகர் வருகை!

## ரவூப் ஹக்கீம் எம்.பி. தகவல்



(எம்.எப்.நவாஸ்)


ஒலுவில் துறைமுகத்தின் மீள் கட்டமைப்பு மற்றும் கடலரிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அம்பாறை மாவட்ட அணர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.றியாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு கருத்துரைத்தபோது, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி இந்திய உயர் ஸ்தானிகர் ஒலுவில் துறைமுகத்திற்கு வருகை தர உள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், அதற்கான ஏற்பாடுகளில் மீனவர் சங்கங்கள், பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் ஏனைய பொது நிறுவனங்கள் ஒருமித்த கருத்துக்களுடன் செயற்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், முன்னாள் மாகாணசபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, பிரதேச செயலாளாளர் பி.ரீ.எம்.இர்பான், உதவிப் பிரதேச செயலாளர், ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர் மீனவ சங்கத் தலைவர்கள், ஆழ்கடல் மீனவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'சத்திய சோதனை' மேடை நாடகம் நாளை திருமறைக் கலாமன்றத்தில்



கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பில், பேராசிரியர் சி.ஜெய்சங்கரின் நெறியாள்கையில், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'சத்திய சோதனை' என்னும் நாடகம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வியையும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியுமான உரையாடலைத் தூண்டும் நாடகமாக இது அமைந்துள்ளது.

நாடக ஆற்றுகையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

# காலவரையின்றி மூடப்பட்டது கொக்குவில் ரயில் நிலையம்

## 20 இலட்சம் ரூபா மோசடிக் குற்றச்சாட்டில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி கைது

யாழ்ப்பாணம் – கொக்குவில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி சுமார் 20 இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பயணிகளுக்கான பிரயாணச் சீட்டு விற்பனை பணம் உள்ளிட்ட ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 20 இலட்ச ரூபா பணத்தை மோசடி செய்துள்ளமை கணக்காய்வில் தெரியவந்துள்ளமையால் , பொறுப்பதிகாரிக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள கோப்பாய் பொலிஸார், கொக்குவில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரியைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கொக்குவில் ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனவும், பிரயாணச்சீட்டைப் பெற யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் காட்சிப்படுத்தப்பட்டு நிலைய அலுவலகக் கதவுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் ரயில் நிலையம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளமையால் கொக்குவில், திருநெல்வேலி பகுதி மக்களும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி , யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவன மாணவர்கள் எனப் பெரும்பாலானோர் ரயில் பயணங்களை மேற்கொள்ள சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

(அ)








# கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு நிரந்தர பிரதி அதிபர் நியமனம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் கடந்த 2023.08.10 ஆம் திகதியிலிருந்து தற்காலிக இணைப்பின் அடிப்படையில் பிரதி அதிபராக கடமையாற்றிய ஏ.எல்.எம்.தன்சீல், கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிரின் வேண்டுதலின் பேரிலும், பாடசாலையின் தேவை கருதியும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஐ.எம்.கே.பீ.இலங்கசிங்கவினால் உடன் செயற்படும் வண்ணம் நிரந்தர பிரதி அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தினை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.நஜீம் கல்விப்பணிமனையில் வைத்து இன்று வழங்கி வைத்தார்.



கொழும்பு காலி முகத்திடலிலுக்கு அருகில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள ஐரிசி ரத்னதீப அதிசொகுசு நட்சத்திர ஹோட்டல் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த ஹோட்டல் அமைப்புத் திட்டத்திற்கு சுமார் 3,000 கோடி இந்திய ஷரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டிடங்களாக கட்டப்பட்டிருக்கும் இந்த ஹோட்டலில் முதல் கட்டிடம் 30 அடுக்கு ஹோட்டலாகவும் இரண்டாவது கட்டிடம் 50 அடுக்கு மாடிகள் கொண்ட குடியிருப்பாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

தரையிலிருந்து சுமார் 100 மீற்றர் உயரத்தில் இந்த இரண்டு கட்டிடங்களையும் இணைக்கும் ஒரு பாலமும் கட்டப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2024இல் வெளியிடப்பெற்றது.